

## வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா என்பதை தயவு செய்து சரிபார்க்கவும்!

# வாக்குரிமை உங்கள் கடமை மட்டுமல்ல; உங்கள் உரிமை!

### சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் நலஉதவிகளை வழங்கி

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,ஜன.8–**

**சென்னை சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் – இளம்பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் மற்றும் நம் பெயரிலான அறக்கட்டளை சார்பில் ‘ஒருங்கிணைந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகள்’ வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பயிற்சி முடித்த, 185 இளைஞர்கள் – இளம்பெண்களுக்கு, தையல் எந்திரம், மடிக்கணினி உள்ளிட்ட நலத்திட்ட பொருட்களையும், சான்றிதழ்களையும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

**திறன் மேம்பாட்டு மையம்**

மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? நான் வரும்போதே உங்களுடைய ஆற்றலைப் பார்க்க முடிகிறது. பெரும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இப்படி ஒரு திறன் மேம்பாட்டு மையம் (Skill Development Center) நம்முடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் முதன்முதலில் தோன்றியது நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவரின் கொளத்தூர் தொகுதியில் தான். மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இது போன்ற ஒரு திறன் மையத்தைத் தொடங்கி வைத்து, ஒரு நிகழ்ச்சிக்காக என்னை அழைத்திருந்தார்கள். அப்பொழுது அங்கு சென்ற போது அதனைப் பார்த்துவிட்டு நானும் சொன்னேன், ``இதேபோன்று என்னுடைய தொகுதியிலும் ஒரு திறன் மேம்பாட்டு மையத்தை நான் தொடங்க வேண்டும்” என்று. அவ்வாறு தொடங்கி, இன்று முதல் அணியினர் பயிற்சியை முடித்து, இரண்டாவது அணியினருக்கான பயிற்சியைத் தொடங்கியிருக்கிறோம்.

**வெற்றி சாத்தியமில்லை.**

இப்படி ஒரு திறன் மேம்பாட்டு மையத்தைத் தொடங்குவது பெரிய விஷயம் அல்ல; அதனைத் தொடர்ந்து நடத்துவதுதான் மிகப்பெரிய சவால். நடத்துவது மட்டும் பெரிய விஷயம் அல்ல, அதில் தொடர்ந்து மாணவிகளும் சகோதரிகளும் பங்கேற்று உங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவது மிகவும் முக்கியம். கற்றுக் கொடுப்பதற்கு ஆட்கள் வந்தாலும், அதனைக் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் வர வேண்டும் அல்லவா? எனவே, இது இவ்வளவு சிறப்பாக நடைபெறுவதற்கு முக்கியக் காரணமாக விளங்கும், இதிலிருந்து கற்றுக்கொண்ட சகோதரிகள் உங்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள். நீங்கள் இல்லாமல் இந்த வெற்றி சாத்தியமில்லை.

நம்முடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி, மாண்புமிகு முதலமைச்சரின் கொளத்தூர் தொகுதியைப் பார்த்து ஈர்க்கப்பட்டுத் தொடங்கப்பட்டதுதான் இந்தத் திறன் மையம். இன்று நம்முடைய தொகுதியைப் பார்த்துப் பல சட்டமன்ற உறுப்பினர்கள், பல தொகுதிகளிலிருந்து வருபவர்கள், `சேப்பாக்கம் - திருவல்லிக்கேணியில் இவ்வளவு சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்; நம்முடைய தொகுதியிலும் இதே போன்று செய்ய வேண்டும், நம்முடைய பகுதியில் உள்ள மகளிருக்கு இந்தத் திறன் மேம்பாட்டைக் கொடுக்க வேண்டும்” என்று நினைக்கிறார்கள். நாம் இன்று தமிழ்நாட்டின் அனைத்து மகளிருக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறோம்.



**மூன்று மாத காலப் பயிற்சி**

வெறும் கற்றுக் கொடுப்பதினால் மட்டும் பயனில்லை. இப்பொழுது நீங்கள் கற்றுக் கொண்டீர்கள். உங்களுக்கு நாங்கள் கொடுத்திருப்பது ஒரு சிறிய உந்துதல்தான். இதனை நீங்கள் கற்றுக்கொண்டு, இனி உங்கள் வருங்காலத்திற்காக இதனை எவ்வாறு பயன்படுத்தப் போகிறீர்கள், யாருடைய எதிர்பார்ப்பும் தயவும் இல்லாமல் உங்கள் சொந்தக் காலில் எவ்வாறு நிற்கப் போகிறீர்கள் என்பதை வருங்காலத்தில் நீங்கள் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும். அதற்காகத்தான் இந்த மூன்று மாத காலப் பயிற்சி உங்களுக்கு வழங்கப் பட்டுள்ளது.

இந்தத் திறன் மையத்தின் வெற்றி எங்கு தெரிகிறது என்றால், இதனை நடத்துபவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் பெயரைச் சொல்லும்போது நீங்கள் கைதட்டி உங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறீர்களே, அதுதான் உண்மையான வெற்றி. அவர்களின் உழைப்பிற்கு இந்த நேரத்தில் நான் தலைவணங்குகிறேன். பாபு உள்ளிட்ட நம்முடைய அறக்கட்டளை மன்றத்தைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளுக்கும், உங்கள் ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் இந்த நேரத்தின் வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று உங்களுக்கான ஒரு உந்துதலை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இனிமேல், நீங்கள் ஒரு பத்து பேருக்கு உங்களுக்குத் தெரிந்ததைக் கற்றுக் கொடுத்து, இந்தச் சமூகம் முழுவதும் உங்களால் இன்னும் பத்து பேர் தங்களுடைய வாழ்க்கையைத் தன்னம்பிக்கையுடன் அமைத்துக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

**மகளிருக்கான ஆட்சி**

குறிப்பாக, பெண்களுக்கான ஆட்சி, மகளிருக்கான ஆட்சி என்று இந்த ஆட்சியை அனைவரும் பெருமையாகச் சொல்கிறார்கள். உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதனைத் தொடர்ந்து ‘திராவிட மாடல்’ அரசு என்று குறிப்பிடுகிறார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு அவர் இட்ட முதல் கையெழுத்து, இங்கு வந்திருக்கும் மகளிருக்கான கையெழுத்துதான். அதுதான் மகளிருக்கான ‘விடியல் பயணத் திட்டம்’. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மகளிரும் இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக மட்டும் குறைந்தது 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் பல்வேறு திட்டங்கள் உள்ளன.



காலை எழுந்தவுடன் வேலைக்குச் செல்லும் பெற்றோர்களின் வேலையைச் சுலபமாக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ‘காலை உணவுத் திட்டத்தைக்’ கொண்டு வந்தார். ஒவ்வொரு நாளும் 22 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள்.

அதே போன்று தேர்தல் அறிக்கையில் சொன்ன மற்றொரு திட்டம் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. இன்று ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே முப்பது லட்சம் மகளிருக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மகளிருக்கான அரசாக நம் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**ஒரே கையெழுத்து**

அனைவருக்கும் என் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு தொடங்கியதிலிருந்து நம்முடைய முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பரிசைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுத்து வருகிறார். மூன்று நாட்களுக்கு முன்பு, அரசு ஊழியர்கள் 23 ஆண்டுகளாக நடத்தி வந்த போராட்டத்தை ஒரே கையெழுத்தின் மூலம் சரி செய்திருக்கிறார்கள்.

அடுத்த நாள் பொங்கல் பரிசுத் தொகை 3,000 ரூபாய் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நேற்று சட்டமன்றத்தில், இரண்டு ஆண்டுகளில் 20 லட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, முதற்கட்டமாக 10 லட்சம் மாணவர்களுக்கு வழங்கும் பணிகளைத் தொடங்கி இருக்கிறார்கள்.

வாக்களித்த மக்கள் மகிழ்ச்சியடையும் வகையிலும், வாக்களிக்காதவர்கள் “இவர்களுக்கு வாக்களிக்காமல் போய்விட்டோமே” என்று வருந்தும் வகையிலும் நம்முடைய பணிகள் இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவார். இதை நாம் வெறும் வாக்குகளுக்காக மட்டும் செய்யவில்லை.

**திராவிட இயக்கம்**

உதாரணத்திற்கு திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதே மகளிருடைய உரிமைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும்தான், 100 ஆண்டுகளுக்கு முன்னால் பெண்களுக்கு வீட்டை விட்டு வெளியே வரவோ, கல்வி கற்கவோ உரிமை இல்லை. மேலாடை அணிவதற்கு உரிமை கிடையாது. இதையெல்லாம் உடைக்க வேண்டும் என்று உருவாக்கப்பட்ட இயக்கம்தான் திராவிட இயக்கம். இன்று 100 ஆண்டுகளை இந்த இயக்கம் கடந்துள்ளது.

பள்ளிப் படிப்பைத் தாண்டி உயர் கல்வி கற்கச் செல்லும் பெண்களுக்கு ‘புதுமைப்பெண்’ திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்.

பெண்கள் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு உள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் செய்த திட்டங்களின் தைரியத்தோடு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்க இருக்கிறோம். உங்களில் 95 சதவீதத்தினர் நம் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி பகுதியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பீர்கள்.

தலைவர் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும், கடந்த முறையை விட அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெறச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

**தயவுசெய்து சரிபார்க்கவும்**

மற்றொரு முக்கியமான விஷயம், சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மூலம் சென்னையில் மட்டும் சுமார் 25 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய தொகுதியில் மட்டும் சுமார் 90,000 வாக்குகள் நீக்கப்பட்டுள்ளன. எனவே, உங்கள் பகுதியில் உள்ள வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் இருக்கிறதா என்பதைத் தயவுசெய்து சரிபார்க்கவும். அது உங்கள் கடமை மட்டுமல்ல, உங்கள் உரிமை. கடந்த ஒன்றரை மாதங்களாக நம் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பணிகளைத் தங்களால் முடிந்தவரை சிறப்பாகச் செயல்படுத்தியுள்ளார்கள். ஜனவரி 18-ஆம் தேதி வரை இதற்கு அவகாசம் உள்ளது. உங்களின் ஒவ்வொருவரின் வாக்கையும் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பயிற்சி பெற்ற சகோதரிகள் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும். இந்தச் சிறப்பான வாய்ப்பை அளித்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் என் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

பகுதிக் கழகச் செயலாளர்கள் காமராஜ், மதன் மோகன், அறக்கட்டளையின் அறங்காவலரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணைச் செயலாளருமான பி.கே.பாபு, நிர்வாகிகள் கலீம், ராஜு, ஜெகன், அகிலன், பால்துரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், உமா மகேஸ்வரன், திறன் மேம்பாட்டுப் பயிற்சியாளர்கள் மெய்யப்பன் காந்தி, மகா சர்வதேச அகாடெமியைச் சேர்ந்த மகாலட்சுமி, சோல்ஸ் (Souls) நிறுவன நிர்வாகிகள், எம்.சி.ஸ்கொயர் நிறுவன நிர்வாகிகள், ஜோசன் ஜெனிஸ் நிறுவனப் பணியாளர்கள், கீதப்பிரியா, திறன் மைய ஒருங்கிணைப்பாளர்கள் அஸ்வின், பாலாஜி, மணிரத்தினம், மஞ்சுநாத், யோகேஸ்வரன், சுதாகர், தருண், சதீஷ் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.